# கிறிஸ்தவனாயிருப்பதால் என்ன நன்மை?

இன்றைய கிறிஸ்தவர்கள் தேவ பக்தியாய் இருப்பதாலோ, உண்மையான கிறிஸ்தவனாய் இருப்பதாலோ உலக ஆசீர்வாதங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். கிறிஸ்தவ சபைகள் எல்லாவற்றிலும், போதகர்களின் போதனைகளும் அப்படியே இருக்கிறது. யேசு கிறிஸ்துவை பின்பற்றுவதால் செல்வம் கொழிக்கும், நல்ல வேலை, வீடு, வசதிகள் யாவும் கிடைக்கும் என்று போதிக்கிறார்கள்.

**ஆனால் இந்த போதனைகளுக்கு மாறாக வேதவசனம் போதிக்கிறது:**

அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். -**2Ti 3:12**

தேவனுடைய ராஜ்யத்திற்கான ஓட்டம் எப்படிப்பட்டது? குறுகலான வழி அல்லவா? வேத வாக்கியங்கள் என்ன சொல்கிறது?

நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள். - **Act 14:22**

**யேசு கிறிஸ்து, தன்னை பின்பற்றி வந்தால் உங்களுக்கு அமைதியான வாழ்க்கையும், சமுதாய அந்தஸ்தும் உண்டு என்று சொன்னாரா?** இல்லை, அவர் சிலுவையை எடுத்துக் கொண்டு பின்பற்ற அல்லவா சொல்லியிருக்கிறார்.

தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல. - **Mat 10:38**

அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். - **Mat 16:24**

அவனவன் தன் சிலுவையை எடுத்துக் கொண்டு வர வேண்டும் என்றால் கிறிஸ்துவைப்போல, அவர் அன்றைய உலக வசதிகள் எதுவும் தேடாது, அன்று எப்படி புறக்கணிக்கப்பட்டவராக, யூத மதத்தின் சடங்காச்சாரங்களை கடைப்பிடிக்காததால் எப்படி மக்களாலும் யூத மதவாதிகளாலும் பைத்தியக்காரனாக

எண்ணப்பட்டரோ, எப்படி தேவையற்ற வேலை செய்பவராக எண்ணப்பட்டரோ அது போல இன்று நாமும் கிறிஸ்துவுக்காக, சத்தியத்திற்காக நின்றால் இன்றைய உலக வசதிகள், மற்றவர்கள் மதிக்கும் சமுதாய அந்தஸ்து கிடைக்காது.

கிறிஸ்துவை உண்மையாக பின்பற்றினால் அப்படிப்பட்ட நிலைதான் உண்டு, அப்படிப்பட்ட பாடுகளுடன் தன்னை பின்பற்றி வரவேண்டும் என்பதையே அவனவன் தன் தன் சிலுவையை எடுத்துக் கொண்டு வரவேண்டும் என்று கூறுகிறார்.

ஆகவே வேதாகமம் முழுவதும் கிறிஸ்துவை பின்பற்றினால் நாம் நம்மை பலி செய்வது மூலம் உலக வசதிகளில் குறைவு பட்டிருப்போம், உபத்திரவங்கள் உண்டு, உலகத்திற்கு நாம் பைத்தியக்காரர்களாய் இருப்போம் என்ற உண்மையையே சொல்கிறது. நாம் உலகத்தாராயிருந்தால் மட்டுமே உலகம் நம்மை சிநேகிக்கும்.

நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. - **Joh 15:19**

வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா? - **Mat 10:25**

யேசு கிறிஸ்து யூதமத தலைவர்களின் தவறான கோட்பாடுகளை கண்டித்ததால் அவர்கள் கிறிஸ்துவை பேய்களின் தலைவன் (பெயல்செபூல் =சாத்தானின் பெயர் ) என்று தூஷித்தனர். இன்று கிறிஸ்தவ மண்டலங்களின் வேதத்தில் இல்லாத தவறான கோட்பாடுகளை சுட்டிக் காட்டினாலும் அதே போலவே நாமும் தூஷிக்கப்படுவோம் என்பதையே இங்கு சொல்கிறார்.

ஆனால் சாத்தான் உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை உலக அந்தஸ்து, செல்வம் வசதிகள் நிறைந்ததாக இருக்கும் என்ற பொய்யை போதித்து முழு கிறிஸ்தவ மண்டலத்தையும் நம்பவைத்திருக்கிறான். மனிதர்களும் இவை தங்களுக்கு விருப்பமானதாக இருப்பதால் இவற்றை ஏற்றுக் கொள்கிறார்கள். கிறிஸ்தவர்களும் இன்றைக்கு கிறிஸ்துவை பின்பற்றினால் துன்பம் என்ற வார்த்தையை விரும்புவதில்லை. கிறிஸ்துவின் மூலம் வாழ்க்கைக்கு தேவையான சகல வசதிகளும் வரும் என்று நம்புகிறார்கள், அதையே விரும்புகிறார்கள்.

அப்படிப்பட்ட வசதியான வாழ்க்கையை தேவன் கொடுப்பதாக **சாட்சி சொல்வதும்** அதனால் **தேவனுக்கு நன்றி அறிவிக்கும் நாள்** என்று கொண்டாடுவதும்தான் இன்றைய கிறிஸ்தவர்கள் இருக்கும் நிலை.

ஆனால் தேவன் இப்படிப்பட்டபாடுகளற்ற சுகவாழ்க்கையை கொடுக்கிறார் என்பதை வேதாகமம் சொல்லவில்லை, நமது ரட்சகர் யேசுவுக்கு பாடுகள் வரக் கூடாது என்று சொன்ன பேதுருவைப் பார்த்து கிறிஸ்து சொன்னது என்ன?

அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார். - **Mat 16:23**

தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். - **Luk 14:27**

அவரது அப்போஸ்தலர்கள் பிற்பாடு இதை நன்கு புரிந்து கொண்டு அநேக உபத்திரவங்களை எதிர் கொள்ள தயார் ஆனார்கள், அநேக உபத்திரவங்கள் மூலம் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசித்தார்கள்.

இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே. - **1Th 3:3**

பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்,
கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். - **1Pe 4:12**

**ஆகவே கிறிஸ்தவ வாழ்க்கை** என்பது வரப்போகும் ராஜ்யத்திற்காக நம்மை நீதியிலும், மனத்தாழ்மையிலும், கடவுளுக்கு கீழ்ப்படிதலிலும் வளர்வது மூலம் தகுதியாக்குதல் ஆகும். ஏற்றதாழ்வுகள், அநீதிகள் நிறைந்த இந்த உலக சமய, ராஜ்ய ,வியாபார அமைப்புகளுக்காக நாம் நிற்காமல், நாம் கிறிஸ்துவுக்கே முதலிடம் கொடுத்து , அவரது சத்தியத்திற்கும் நீதிக்கும் அதிக நேரம் கொடுப்போமாக.

நமக்கு என்ன விதமான சோதனைகள் உண்டு வாழ்க்கை எப்படி போகும் என்பதை நாம் அவரது சித்தத்திற்கு விட்டுவிட்டு, முதலாவது நாம் தேவனுடைய ராஜ்யத்திற்கு உரியவைகளை தேட வேண்டும்.

கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும் என்பது தேவனுடைய ராஜ்யத்திற்கு தேவையானவைகளை கேட்டால் கொடுக்கப்படும் என்ற உத்திரவாதம்தான். ஆவிக்குரிய காரியங்கள் கேட்பது என்பது, சத்தியத்தை புரிந்து

கொள்ள பரிசுத்த ஆவியை கேட்பது, தேவனுடைய காரியங்களை செய்ய வாய்ப்பு மற்றும் அவற்றை செய்ய ஞானம் போன்றவற்றை கேட்பது ஆகும்.

சீஷர்களும் யேசுவோடு இருந்தபோதும், பின்பும் அவரிடம் உலக வசதி, வியாபார காரியங்களுக்காக எதையும் கேட்க்க வில்லை. எந்த அப்போஸ்தலர்களும் தங்களது வரத்தினால் அற்புதங்கள் செய்தாலும் தங்களுக்காக எதையும் செய்யவும் இல்லை.

இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம். - **1Co 15:19**

தேவ நீதியை விரும்புகிறவர்களுக்கே இது சந்தோசமான செய்தி. ஏனென்றால் பூமியில் வரப்போகும் தேவனுடைய அரசில் நீதியும், எல்லா மக்களுக்கும் நல்ல வாழ்க்கையும் கிடைக்கும். அந்த நீதியான ராஜ்யத்திற்கான வேலைகளை செய்யும் போது அநீதியான இந்த உலக செல்வம் நமக்கு கொடுக்காத சமாதானத்தையும் தைரியத்தையும் அவர் நமக்கு கொடுப்பார்.

இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் … அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள் - **Joh 6:27**

நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே. - **Gal 1:10**

நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி. தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, **பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான்**. - **2Ti 2:3**

உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; … **ஜீவனத்தின் பெருமையுமாகிய** உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். - **1Jn 2:15 ,16**

உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? - **Jas 4:4**

✡✡✡✡✡✡✡

மேலும் இலவச பிரதிகளுக்கு தொடர்பு கொள்ளவும்:

**98 415 400 81**

**w w w. d i v i n e p l a n . i n**